724/0 / 73 | Loc. No. 1/0/0. Nattham Palayam

आवक
INWARD 710
पावरग्रिड /POWERGRID
करूर /KARUR. 03/09/19

அனுப்புனர்

K. கந்தசாமி
S/O. கருப்புசாமி
மாம்பாடி, மாம்பாடி (P.O)
வேலணை (via) திருப்பூர் மாவட்டம் 638106.

பெறுனர்

பொது தகவல் அலுவலர் மற்றும் துணை பொது மேலாளர் பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்,
400/230 KV சப் ஸ்டேஷன். கோயம்புத்தூர் மெயின் ரோடு,
கே. பரமத்தி (அஞ்சல்), கரூர் - 639111

ஐயா ,

தங்கள் நிறுவனம் ஏற்படுத்த இருக்கும் 400 kva நியு புகளூர் முதல் புகளூர் வரை உயர் மின் கோபுர திட்டத்திற்கு கீழ்க்கண்ட ஆவணங்கள் தேவைபடுகின்றன. இந்த ஆவணங்கள் கிடைக்கபெற்ற பின் எங்களது ஆதரவு தெரிவிப்பது பற்றி நான் எழுத்து பூர்வமாக தெரிவிக்க இயலும். ஆவணங்கள் அனைத்தும் பின்வருமாறும்.

1. திட்டம் சம்பந்தமான விரிவான திட்ட அறிக்கை நகல்,

2. Profile approval copy- யின் நகல் - profile-approvel co-ordination உடன்,

3.திட்டம் முழுமைக்குமான -

1.Google Coordintion, 2. Routemap, 3.Approved Survey co-ordination , 4. Angle deviation, 5. விரிவான check survey list மற்றும் 6. Re Check survey list 7. இத் திட்டதின் ROW1 , ROW2, ROW3 - களின் நகல்,

4. Angle Deviation மின்பாதையை மாற்றுவதற்கான காரணிகள் சம்பந்தமான ஆவண நகல்,

5. மின் கோபுரங்களுக்கு இடைப்பட்ட குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச நீளம் ,பூமிக்கும் மின் வடத்திற்குமான இடைவெளி, மின் பாதையின் இருபுறமும் கொடுக்கப்பட வேண்டிய இடைவெளி மேலும் கட்டிடம்,கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறுகளுக்கும் மின் பாதைக்குமான இடைவெளி

Shri. Sooraj
pl. arrange to forward to CPIO.
3/9

04/09/19

953

மற்றும் கிணறு தூர்வார வெடிமருந்தை கையாள்வதற்கான இடைவெளி சம்பந்தமான ஆவணங்களின் நகல்,

6. திட்டம் சம்பந்தமான அரசு அனுமதி ஆணை நகல் மற்றும் திட்டம் எந்த சட்டத்தின் கீழ் அனுமதி பெறப்பட்டது மற்றும் எந்த சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது சம்பந்தமான சட்ட ஆவணங்களின் நகல்,

7. Paper Publication Copy மற்றும் Gazzette notification Copy - களின் நகல்,

8. திட்டத்திற்கான மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ஆணை நகல்,

9. இவ்வழக்கு சம்பந்தமாக மின்தொடரமைப்புக்கழகத்தினர் மாவட்ட ஆட்சியர் முன்பு தாக்கல் செய்த மனு நகல்,

10 .Board proceedings copy களின் நகல்,

11. என் நிலத்தில் அளவீடு மற்றும் மின்கோபுர கட்டுமான பணிகளை செய்ய என்னிடம் ஏதாவது முன் அனுமதி பெற்றிருந்தால் அதனுடைய நகல்,

12. உயர்மின்கோபுரம் ஒருவருடைய நிலத்தில் அமைக்கும்போது பின்பற்றவேண்டிய நடைமுறைகள் மற்றும் பின்பற்றவேண்டிய சட்டவிதிகளின் நகல்,

13 திட்டம் செயல்பாட்டிற்கு வரும்போது பரிந்துரைக்கப்பட்ட இடைவெளிக்கு உள்ளேயும் வெளியேயும் உருவாகும் மின்காந்த அலைகளால் ஏற்படும் கதிர்வீச்சின் அளவு , அதன்பாதிப்புகள் மற்றும் அதைத் தடுக்க எடுக்கவேண்டிய முன்எச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பான கதிர்வீச்சின் அளவு ஆகியன குறித்த ஆவணங்களின் நகல்,

14 .திட்டம் சம்பந்தமான கருத்துகேட்பு கூட்டம் நடத்தியதற்கான ஆவணங்கள் மற்றும் கருத்துகேட்பு கூட்டத்திற்கு பாதிக்கப்படப்போகும் விவசாயிகளுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களின் நகல்,

15 . வேளாண்,தோட்டக்கலை, மூலிகை மற்றும் வனபயிர்களுக்கான இழப்பீடு சம்பந்தமான ஆவண நகல் மற்றும் இழப்பீடு கணக்கிடும் நடைமுறைகள் குறித்த ஆவண நகல் மற்றும் மின் தொடரமைப்புக் கழகத்தால் எங்களுக்கு பயிர் இழப்பீடு பெறுவதற்காக வழங்கப்பட்டு , பூர்த்தி செய்து மின்தொடரமைப்புக்கழகத்தினரால் திரும்ப பெறப்பட்ட விண்ணப்பங்களின் நகல்கள்,

16 திட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு நில உரிமையளருக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் சம்பந்தமான ஆவண நகல் ,

17. ஏதேனும் விபத்து நேரிட்டால் பாதிக்கப்பட்டவருக்கு வழங்கும் உத்திரவாதம் மற்றும் இழப்பீடு குறித்த ஆவண நகல்,

18. திட்டத்தினால் ஏற்படும். சமூக, பொருளாதார மற்றும் சுற்றுசூழல் பாதிப்பு தாக்க அறிக்கை நகல் மற்றும் திட்டத்திற்கான சுற்றுசூழல் அனுமதி நகல்,

19 . இத்திட்டத்தால் வெட்டப்பட்ட மற்றும் வெட்டப்பட உள்ள மரங்களின் எண்ணிக்கை சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் திட்டத்தால் ஏற்படும் பசுமை அழிப்பை ஈடு செய்ய மின்தொடரமைப்புக்கழகத்தினர் எடுத்துள்ள மற்றும் எடுக்கப்போகும் நடவடிக்கை குறித்த ஆவண நகல்கள்,

20. இந்த விசாரணை இந்திய தந்தி சட்டத்தின் படி நடக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது அதற்கான மத்திய அரசின் உத்தரவு நகல்

21. இத்திட்டத்தினால் என் நிலத்தில் மின் கோபுரம் அமையவுள்ள நிலத்தின் பரப்பளவு, மின்பாதையின் பரப்பளவு (ROW) மற்றும் நிலமதிப்பிழப்பால் பாதிக்கப்படும் நிலத்தின் பரப்பளவு சம்மந்தமான ஆவணங்களின் நகல்

22. இத்திட்டத்தினால் பாதிக்கபடும் எனது நிலத்தின் அரசு வழிகாட்டி மதிப்பு மற்றும் மேற்படி நிலத்தின் சந்தை மதிப்பு சம்மந்தமான ஆவணங்கள்.

23. இத்திட்டத்தினால் எனது நிலத்திற்கு ஏற்படும் மொத்த சந்தை மதிப்பிழப்பு (ரூபாயில்)

24. இத்திட்டத்தை நிறைவேற்ற தமிழக அரசு வெளியிட்டுள்ள அணைத்து அரசு ஆணை நகல்
25. இத் திட்டத்தை செயல்படுத்த அரசு வழிகாட்டிய அணைத்து சட்ட வரையறை விளக்கம் மற்றும் நகல் .

ஆகிய மேற்கண்ட ஆவணங்களை எங்களுக்கு வழங்க உத்தரவு இடுமாறும் மேற்கண்ட ஆவணங்களை அதிகாரம் பெற்றவரின் கையொப்பம் மற்றும் முத்துரையுடன் எனக்கு வழங்கவும் மேலும், ஆவணங்கள் இல்லை எனில் அதையும் எழுத்து புர்வமான பதிலையும் அளிக்க உத்தரவிடுமாறும் மேற்கண்ட அனைத்து ஆவணங்கள் வழங்கிய பின்பு, துறைசார்ந்த வல்லுனர்களின் ஆலோசனை பெற சிறிது கால அவகாசம் வழங்குமாறும் மேற்காணும் ஆவணகளின்படி மின் கோபுரம் அல்லது மின் பாதை என் நிலத்தில்தான் வருகிறதா என்பதை உறுதிபடுத்த என் முன்னால் அளவீடு செய்து காண்பிக்க உத்தரவிடுமாறும் அவ்வாறு அளவீடு செய்யும் போது எங்களின் சொந்த துறைசார் வல்லுனர் ஒருவரை எங்களுடன் வர அனுமதி அளிக்குமாறும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் . மேற்கண்ட ஆவணகளை வழங்காமல் மின்கோபுரம் அமைக்க முற்பட்டால் எங்களுக்கு இந்திய அரசியல் அமைப்பு சட்டம் வழங்கியுள்ள பிரிவு 300Aல் அளிக்கப்பட்டுள்ள உரிமை மீறப்பட்டதாகும் எனவும் , எனவே தாங்கள் மேற்கண்ட ஆவணகளை எங்களுக்கு வழங்க தாழ்மையுடன் கேட்கொள்கிறேன் .

நிள உரிமையாளர்

K. Kandasamy

30-8-2019

நாள் : 30-8-2019

இடம் : மாம்பாடி